www.Padasalai.Net

# [ வரலாறு ]

## சுருக்கமான விடையளிக்கவும்:

1} சீனா-ஜப்பானியப் போரின் முக்கியத்துவத்தை நீ எவ்வாறு மதிப்பீடு செய்வாய்?

- சீன-ஜாப்பனியப் போரில் {1894-95} சீனாவை சிறிய நாடான ஜப்பான் தோற்கடித்தது

2}மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக?

- இங்கிலாந்து
- பிரான்ஸ்
- ரஷ்யா

3}ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்றுவடிவங்கள் எவை?

- இங்கிலாந்து - ஆரவாரமான நாட்டுப்பற்று
- பிரான்ஸ் - அதிதீவிரப் பற்று
- ஜெர்மனி - வெறிகொண்ட நாட்டுப்பற்று

4}பதுங்குக் குழிப்போர்முறை குறித்து நீங்கள் அறிந்ததென்ன?

- போர்வீரர்களால் தோண்டப்படும் பதுங்கு குழிகள் எதிரிகளின் சுடுதலில் இருந்து தங்களைக் பாதுகாத்துக் கொள்வதற்காக.

5}முஸ்தபா கமால் பாட்சா வகித்தப் பாத்திரமென்ன ?

- துருக்கியை விடுதலை மற்றும் நவீனமயமாக்கத்திற்கு காரணமாக இருந்தார்.

6}டாலர் ஏகாதிபத்தியம் – தெளிவுபட விளக்குக?

- அமெரிக்கா தொலைதூர நாடுகளுக்குப் பொருளாதார உதவி செய்வதன் மூலம் அவற்றின் மீது அதிக்கம் செலுத்துவதாகும்.

7}முதல் உலகப்போருக்குப் பிந்தைய உலகத்தின் மூன்று முக்கிய சர்வாதிகாரிகள் யாவர்?

- முசோலினி - இத்தாலி
- ஹிட்லர் - ஜெர்மனி
- பிராங்கோ - ஸ்பெயின்

8}மார்ஷல் திட்டம் என்றால் என்ன?

- மேற்கு ஐரோப்பிய நாடுகளை தம் செல்வாக்கினுள் வைத்துக் கொள்ள அமெரிக்க ஐக்கிய நாடுகளால் உருவாக்கப்பட்டது.

9}மூன்றாம் உலக நாடுகள் பற்றி ஒரு குறிப்பு வரைக?

- ❖ இரண்டு வல்லரசு நாடுகளுடன் சேராமல் வெளியிலிருந்த நாடுகள் மூன்றாம் உலக நாடுகள் ஆகும்.

10}பிரம்ம சமாஜத்தால் ஒழிக்கப்பட்ட சமூகத்தீமைகள் யாவை?

- ❖ உடன்கட்டை ஏறுதல்
- ❖ குழந்தை திருமணம்
- ❖ பலதாரமணம்

11}பாளையக்காரர்களின் கடமைகள் யாவை?

- ❖ வரி வசூலித்தல்
- ❖ வழக்குகளை விசாரித்தல்
- ❖ நிலப்பகுதிகளை நிர்வகித்தல்
- ❖ சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்தல்

12}கிழக்கு மற்றும் மேற்கில் அமையப்பெற்ற பாளையங்களைக் கண்டறிந்து எழுதுக?

- ❖ கிழக்கில் உள்ள பாளையங்கள்: சாத்தூர்,நாகலாபுரம்,எட்டையபுரம், பாஞ்சாலங்குறிச்சி
- ❖ மேற்கு உள்ள பாளையங்கள்: ஊத்துமலை,தலைவன்கோட்டை,நடுவக்குறிச்சி, சிங்கப்பட்டி

13}களக்காடு போரின் முக்கியத்துவம் யாது?

- ❖ இப்போரில் மாபூஸ்கானின் படைகள் தோற்கடிக்கப்பட்டு பூலித்தேவர் வெற்றி பெற்றார்.

14}கம்பெனியாருக்கும் கட்டபொம்மனுக்கும் இடையே சர்ச்சை ஏர்படக் காரணமாக விளங்கியது எது?

- ❖ ஆட்சியர்கள் பாளையக்காரர்களை அவமானப்படுத்தியதோடு வரி வசூலிக்கப் படையைப் பயன்படுத்தினர்.

15}வாரிசு இழப்புக் கொள்கையின் அடிப்படையில் பிரிட்டிஷ் அரசில் இனைத்துக் கொள்ளப்பட்ட பகுதிகளைப் பட்டிடலிடவும்?

- ❖ சதாரா,
- ❖ சம்பல்பூர்
- ❖ ஜான்சி
- ❖ நாக்பூர்

16}ஒத்துழையாமை இயக்கத்தை ஏன் காந்தியடிகள் திரும்பப்பெற்றார்?



Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

- 1922 பிப் 5 சௌரிசௌரா என்ற கிராமத்தில் தேசியவாதிகள் நடத்திய பேரணி வன்முறையாக மாறியது. இதில் 22 காவலர்கள் கொல்லப்பட்டனர்.

17}சைமன் குழு புறக்கணிக்கப்பட்டது ஏன்?

- சைமன் குழுவில் இந்தியர்கள் எவரும் இடம்பெறவில்லை,வெள்ளையர்கள் மட்டுமே இடம் பெற்றிருந்தனர்.

18}நீதிக்கட்சியால் நிறைவேற்றப்பட்ட இந்துசமய அறநிலைய சட்டத்தின் முக்கியத்துவத்தை விவாதிக்கவும்?

- நீதிக்கட்சி 1926 இல் இந்து சமய அறநிலைய சட்டத்தை இயற்றியது.

19}தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தால் வெளியிடப்பட்ட செய்தித்தாள்களின் பெயர்களைக் குறிப்பிடுக?

- திராவிடன் - தமிழ்
- ஜஸ்டிஸ் - ஆங்கிலம்
- ஆந்திர பிரகாசிகா - தெலுங்கு

20}முத்துத் துறைமுக நிகழ்வை விவரி?

- 1941 டிச ஹவாயிலுள்ள அமெரிக்கா கப்பற்படைத்தளமான முத்துத் துறைமுகத்தின் மீது ஜாப்பானிய விமானப்படை முன்னறிவிப்பின்றி தாக்குதலைத் தொடுத்தன.

21}பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்களின் பெயர்களைக் குறிப்பிடுக?

- உலகவங்கி
- பன்னாட்டு நிதி அமைப்பு

22}இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தில் அன்னிபெசன்ட்டின் பங்களிப்பு யாது?

- 1916 இல் தன்னாட்சி இயக்கத்தை தொடங்கினார்.
- நியூ இந்தியா, காமன் வீல், பத்திரிக்கை தொடங்கினார்.

## [ புவியியல் ]

1}இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களைக் கூறுக?

- வடமேற்கு - பாகிஸ்தான் ,ஆப்கானிஸ்தான்
- வடக்கு - சீனா ,நேபாளம் , பூடான்
- கிழக்கு - வங்காளதேசம் ,மியான்மர்


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

2}இந்தியாவின் மேற்கு நோக்கி பாயும் ஆறுகளைப் பற்றி கூறுக?

- நர்மதை
- தபதி
- மாஹி
- சபர்மதி

3}இலட்சத்தீவுக் கூட்டங்கள் பற்றி விவரி?

- இந்தியாவின் மேற்கு பகுதியிலும், முருகைப் பாறைகளால் ஆனது.
- 32 ச.கி.மீ பரப்பளவுக் கொண்டது.

4}காலநிலையை பாதிக்கும் காரணிகளை பட்டியலிடுக?

- அட்சங்கள்,
- கடல் மட்டத்திலிருந்து உயரம்,
- கடலிலிருந்து அமைந்துள்ள தொலைவு,
- பருவக்காற்று,
- நிலத்தோற்றம்,
- ஜெட் காற்றோட்டம்,

5}"வெப்ப குறைவு விகிதம்" என்றால் என்ன?

- புவிப்பரப்பிலிருந்து உயரே செல்லச் செல்ல வளிமண்டலத்தில் ஒவ்வொரு 1000 மீட்டர் உயரத்திற்கு 6.5 'c என்ற அளவில் வெப்பநிலை குறைகிறது.

6}"ஜெட் காற்றோட்டங்கள்" என்றால் என்ன?

- வளிமண்டலத்தின் உயர் அடுக்குகளில் குறுகிய பகுதிகளில் வேகமாக நகரும் காற்றுகள்.

7}இந்தியாவின் நான்கு பருவக் காலங்களைக் குறிப்பிடுக?

- குளிர்காலம் - ஜனவரி முதல் பிப்ரவரி
- கோடைக்காலம் - மார்ச் முதல் மே
- தென்மேற்குப் பருவக்காற்று காலம் - ஜீன் முதல் செப்டம்பர்
- வடகிழக்குப் பருவக்காற்று காலம் - அக்டோபர் முதல் நவம்பர்

8}'பருவமழை வெடிப்பு' என்றால் என்ன?

- இடி மற்றும் மின்னலுடன் கூடிய துவக்கம்.

9}அதிக மழைப்பெறும் பகுதிகளைக் குறிப்பிடுக?

- மேற்குக் கடற்கரை,
- அசாம்,



Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

- திரிபுரா,
- நாகலாந்து,
- அருணாச்சலப்பிரதேசம்,

10}மண் – வரையறு?

- கனிமங்களின் கூட்டுப் பொருள்,
- மக்கியத் தாவரங்கள்,
- விலங்கினப் பொருட்கள்,
- காற்று,
- நீர் - ஆகியவற்றை உள்ளடக்கியது.

11}இந்தியாவில் காணப்படும் மண்வகைகளின் பெயர்களைப்பட்டியலிடுக?

- வண்டல் மண்,
- கரிசல் மண்,
- செம்மண்,
- சரளைமண்,
- காடு மற்றும் மலைமண்,
- வறண்ட பாலைமண்,
- உப்பு மற்றும் காரமண்,
- களிமண் மற்றும் சதுப்புநிலமண்,

12}கரிசல் மண்ணின் ஏதேனும் இரண்டு பண்புகளை எழுதுக?

- ஈரமாக இருக்கும் போது சேறாகவும்,
- ஈரப்பதத்தை நீண்ட நேரம் தக்கவைத்துக் கொள்ளும் தன்னையும் உடையது.

13}வேளாண்மை – வரையறு?

- ஒரு குறிப்பிட்ட பயிர்களை உற்பத்தி செய்வதும்,
- கால்நடைகளை வளர்த்தும்,
- மக்களுக்கு உணவும் கால்நடைக்கு தீவனமும் வழங்குவது.

14}இந்தியாவின் வேளாண்மை முறைகளை குறிப்பிடுக?

- தன்னிறைவு வேளாண்மை,
- இடப்பெயர்வு வேளாண்மை,
- தீவிர வேளாண்மை,
- கலப்பு வேளாண்மை,



Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

- வறண்ட நில வேளாண்மை,
- படிக்கட்டு வேளாண்மை,

15}இந்திய வேளாண் பருவங்களைக் குறிப்பிடுக?

- காரிஃப் :ஜீன் - செப்டம்பர்,
- ராபி - அக்டோபர் - மார்ச்,
- சையத் - ஏப்ரல் - ஜீன்,

16}இந்தியாவின் தோட்டப் பயிர்களைப் குறிப்பிடுக?

- தேயிலை,
- காபி,
- இரப்பர்,
- வாசனைப் பொருட்கள்,

17}கால்நடைகள் என்றால் என்ன?

- கால்நடைகள் என்பது விவசாயத்தோடு ஒருங்கிணைந்த கூறுகள் ஆகும்.
- எ.கா:ஆடு, மாடு ,எருமை.

18}வளத்தை வரையறுத்து அதன் வகைகளை குறிப்பிடுக?

- இயற்கையிலிருந்து பெறப்பட்டு உயிரினங்களால் பயன்படுத்துப்படும் அனைத்தும் இயற்கை வளமாகும்,
- வகைகள்:
    1. புதுப்பிக்கக்கூடிய வளம்,
    2. புதுபிக்க இயலா வளம்,

19}இயற்கை எரிவாயு என்றால் என்ன?

- இயற்கை எரிவாயு பொதுவாக பெட்ரோலியப் பகுதிகளுடன் இணைந்து கணப்படும்,
- இயற்கையாக உருவாகும் ஒரு நீர்ம வாயுவாகும்,

20}நிலக்கரியின் வகைகளை அதன் கரிம அளவுகளுடன் குறிப்பிடுக?

| | நிலக்கரியின் வகைகள் | கரிம அளவுகள் |
|---|---|---|
| 1 | ஆந்தரசைட் | 80 முதல் 90% |
| 2 | பிட்டுமினஸ் | 60 முதல் 80% |
| 3 | பழுப்பு நிலக்கரி | 40 முதல் 60% |
| 4 | மரக்கரி | 40 %க்கும் குறைவு |

21}இடப்பெயர்வு என்றால் என்ன? அதன் வகைகளைக் குறிப்பிடுக?

- ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு இடம் பெயர்ந்து செல்வதாகும்,
- வகைகள்:



Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

1. உள்நாட்டு இடப்பெயர்வு,
2. சர்வதேச இடப்பெயர்வு,

22}பன்னாட்டு வணிகம் – வரையறு?

- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே நடைபெறும் வணிகம்,

23}தேரி – என்றால் என்ன?

- இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் கடற்கரையோரங்களில் உருவாக்கப்பட்ட மணல் குன்றுகள்.

24}கடற்கரைச்சமவெளி எவ்வாறு உருவாகிறது?

- கடற்கரைச் சமவெளி, கிழக்கு நோக்கிப் பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கும் ஆறுகளால் உருவாகிறது.

25}தமிழ்நாட்டின் முக்கிய தீவுகளைக் குறிப்பிடுக?

- பாம்பன்
- முயல் தீவு
- குருசடை
- நல்லதண்ணித் தீவு
- உப்புத்தண்ணித் தீவு
- புள்ளி வாசல்
- ஸ்ரீரங்கம்

26}தாமிரபரணி ஆற்றின் துணை ஆறுகளின் பெயர்களை எழுதுக?

- காரையாறு
- சேர்வலாறு
- மணிமுத்தாறு
- கடனா நதி
- பச்சையாறு
- சிற்றாறு
- இராமநதி

27}தமிழ்நாட்டின் வேளாண் பருவக்காலங்களை எழுதுக?

- சொர்ணவாரி
- சம்பா
- நவரை

28}கோயம்புத்தூர் ஏன் தமிழ்நாட்டின்"மான்செஸ்டர்"என அழைக்கப்படுகிறது?



Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

- காலனித்துவ காலத்திலிருந்து பருத்தி நெசவுத் தொழில் வளர்ச்சியின் காரணமாக கோயம்புத்தூர் தமிழ்நாட்டின் மான்செஸ்டர் என அழைக்கப்படுகிறது.

29}தமிழ்நாட்டின் முக்கிய பல்நோக்குத் திட்டங்களின் பெயர்களை எழுதுக?

- மேட்டூர் அணை
- அமராவதி அணை
- சாத்தனூர் அணை
- கிருஷ்ணகிரி அணை
- வைகை அணை
- பாபநாசம் அணை

30}தமிழ்நாட்டின் விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களைப் பட்டியலிடுக?

i. விமான நிலையங்கள்:
சென்னை, கோயம்புத்தூர், மதுரை,சேலம்,திருச்சி,

ii. துறைமுகங்கள்:
சென்னை,எண்ணூர்,தூத்துக்குடி

## [ குடிமையியல் ]

1}அரசியலமைப்பு என்றால் என்ன?

- ✓ ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு இவை அச்சாணி ஆகும்,

2}குடியுரிமை என்பதன் பொருள் என்ன?

- ✓ ""ஒரு நகர அரசில் வசிப்பவர்""என்பதாகும்,

3}இந்திய அரசியலமைப்பால் வழங்கப்படும் அடிப்படை உரிமைகளை பட்டியலிடுக?

- ✓ சமத்துவ உரிமை
- ✓ சுதந்திர உரிமை
- ✓ சுரண்டலுக்கெதிரான உரிமை
- ✓ சமயச் சார்பு உரிமை
- ✓ கல்வி,கலாச்சார உரிமை
- ✓ அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை

4}நீதிப்பேராணை என்றால் என்ன?

- ✓ நீதிமன்ற முத்திரையுடன், நீதிமன்றத்தால் வெளியிடப்படும் கட்டளை அல்லது ஆணை,

5}இந்தியாவின் செம்மொழிகள் எவை?

- ✓ தமிழ்
- ✓ சமஸ்கிருதம்


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

- ✓ தெலுங்கு
- ✓ கன்னடம்
- ✓ மலையாளம்
- ✓ ஒடியா

6}மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகளை மூன்று தலைப்புகளில் பட்டியலிடுக?

- ✓ சட்ட மன்ற உறவு
- ✓ நிர்வாக உறவு
- ✓ நிதி உறவு

7}இந்தியக் குடியரசுத் தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?

- ✓ குடியரசுத் தலைவர் ஒற்றை மாற்று வாக்கு மூலம் விகிதாச்சார பிரதிநிதித்துவத்தின்படி வாக்காளர் குழமத்தால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

8}நடுவண் அரசின் அமைச்சர்கள் தரநிலைகளின்படி எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளனர்?

- ✓ காபினெட் அமைச்சர்கள்
- ✓ இராசாங்க அமைச்சர்கள்
- ✓ இணை அமைச்சர்கள்

9}உச்சநீதிமன்ற நீதிபதி ஆவதற்கான தகுதிகள் யாவை?

- ✓ இந்தியக் குடிமகனாய் இருத்தல் வேண்டும்,
- ✓ ஐந்து ஆண்டுகள் உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக பணியாற்றிருக்க வேண்டும்,

10}மாநில ஆளுநரின் முக்கியத்துவம் யாது?

- ✓ மாநில நிர்வாகத்தின் அரசியலமைப்புத் தலைவர்,
- ✓ நிர்வாகம் மாநில ஆளுநரின் பெயரில் செயல்படும்.

11}ஆளுநராக நியமிக்கப்படுவதற்கானதகுதிகள் யாவை?

- ✓ இந்திய குடிமகனாக இருத்தல் வேண்டும்,
- ✓ 35 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்,

12}வெளியுறவுக் கொள்கை என்றால் என்ன?

- ✓ ஒரு நாடு வெளியுறவு விவகாரங்களின் மூலம் தேசிய நலனைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் இருதரப்பு மற்றும் பலதரப்பு உறவுகளைப் பேணவும் வடிவமைக்கப்பட்ட கொள்கை.

13}பஞ்ச்சீல கொள்கைகளில் ஏதேனும் நான்கினைப் பட்டியலிடுக?


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

- ✓ பரஸ்பர ஆக்கிரமிப்பின்மை
- ✓ அமைதியாக சேர்ந்திருத்தல்,
- ✓ பரஸ்பர நலனுக்காக சமத்துவம் மற்றும் ஒத்துழைத்தல்.
- ✓ பரஸ்பரம் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதிருத்தல்,

14}சார்க் உறுப்பு நாடுகளைப் பட்டியலிடுக?

- ✓ இந்தியா
- ✓ பாகிஸ்தான்
- ✓ இலங்கை
- ✓ பூடான்
- ✓ மாலத்தீவு
- ✓ நேபாளம்
- ✓ வங்காளதேசம்
- ✓ ஆப்கானிஸ்தான்

15}அணிசேரா இயக்கத்தின் நிறுவனத் தலைவர்கள் யாவர்?

- ✓ ஜவஹர்லால் நேரு
- ✓ டிட்டோ
- ✓ நாசர்
- ✓ சுகர்னோ
- ✓ குவாமே நிக்ரூமா

16}இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களை எழுதுக?

- ✓ பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பூடான், நேபாளம், சீனா, வங்காளதேசம், மியான்மர், இலங்கை, மாலத்தீவு

17}பிரிக்ஸ் உறுப்பு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக?

- ✓ பிரேசில்
- ✓ ரஷ்யா
- ✓ இந்தியா
- ✓ சீனா
- ✓ தென்னாப்பிரிக்கா

18}இந்தியா உறுப்பினராக உள்ள ஏதேனும் ஐந்து உலகளாவிய குழுக்களைப் பட்டியலிடுக?

- ✓ ஐ.பி.எஸ்.எ
- ✓ பி.சி.ஐ.எம்
- ✓ எம்.ஜி.சி
- ✓ ஈ.எ.எஸ்



Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

- ✓ ஜி.சி.சி

## [ பொருளியல் ]

1}நாட்டு வருமானம் –வரையறு?

- ❖ ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பாகும்.

2}மொத்த உள்நாட்டு உற்பத்தி என்றால் என்ன?

- ❖ ஒரு ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உள்ள உற்பத்திக் காரணிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகள் ஆகும்.

3}தனிநபர் வருமானம் என்றால் என்ன?

- ❖ நாட்டு வருமானத்தை மக்கள் தொகையால் வகுப்பதன் மூலம் தனிநபர் வருமானம் பெறப்படுகிறது.

4}உலகமயமாக்கல் என்றால் என்ன?

- ❖ உலகப்பொருளாதாரத்துவ நாடுகளை ஒருங்கினைப்பதாகும்.

5}உலகமயமாக்கலின் வகைகளை எழுதுக?

- ❖ தொன்மையான உலகமயமாக்கல்,
- ❖ இடைப்பட்ட உலகமயமாக்கல்,
- ❖ நவீன உலகமயமாக்கல்,

6}உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பின் மூன்று அடிப்படைக் கூறுகள் யாவை?

- ❖ கிடைத்தல்
- ❖ அணுகல்
- ❖ உறிஞ்சுதல்

7}தமிழ்நாட்டிலுள்ள சில ஊட்டச்சத்து திட்டங்களின் பெயரை எழுதுக?

- ❖ மதிய உணவுத்திட்டம்
- ❖ பிரதம மந்திரி கிராமோதயா யோஜனா திட்டம்,
- ❖ தமிழ்நாடு ஒருங்கினைந்த ஊட்டச்சத்து திட்டம்,
- ❖ புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். ஊட்டச்சத்து உணவுத்திட்டம்

8}வரி வரையறுக்க?

- ❖ எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி நேரடியாக அரசாங்கத்திற்கு செலுத்துகின்ற கட்டாய கட்டணமாகும்.

9}அரசுக்கு ஏன் வரி செலுத்த வேண்டும்?

- ❖ அரசு வரிவிதிப்பின் மூலம் பெற்ற நிதிமூலத்திலிருந்து பல செயல்களை நிறைவேற்ற முடியும்.

10}வள்ர்வீத வரி என்றால் என்ன?



Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

- வருமானம் அதிகரிக்கும் போது வரியும் விகிதமும் அதிகரிக்கும்.

11}கருப்பு பணம் என்பதன் பொருள் என்ன?

- கருப்பு சந்தையில் ஈட்டப்பட்ட வருமானம்,
- வரி நிர்வாகியிடமிருந்து மறைக்கப்பட்ட பணம்,

12}வரி ஏய்ப்பு என்றால் என்ன?

- தனிநபர்கள், நிறுவன்ங்கள் மற்றும் அறக்கட்டளைகள் ஆகியவை சட்டவிரோதமாக வரி செலுத்தாமல் இருப்பது.

13}வரிகளின் வகைகள் யாவை?எடுத்துக்காட்டு தருக?

| | நேர்முக வரிகள் | மறைமுக வரிகள் |
|---|---|---|
| 1 | ❖ வருமான வரி | ❖ முத்திரைத்தாள் வரி |
| 2 | ❖ நிறுவன வரி | ❖ பொழுதுபோக்கு வரி |
| 3 | ❖ சொத்து வரி | ❖ கலால் வரி |
| 4 | | ❖ பண்டங்கள் மற்றும் பணிகள் வரி |

14}தொழில்முனைவோர் என்பவர் யாவர்?

- புதிய சிந்தனைகளுக்கும்,வணிக செயல்முறைகளுக்கும் புத்தாக்கம் புனைபவர்.

15}தொழில்முனைவு என்றால் என்ன?

- தங்கள் தொழிலை பெருக்குவதற்கான செயல்முறைகளே ஆகும்.

## { விரிவான விடையளி }

## வரலாறு

1}ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டுக்காட்டுக?

- போலாந்து மீண்டும் உருவாக்கப்பட்ட்து.
- சிறிய கப்பற்படை மட்டுமே வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டது.
- அல்சேஸ்-லொரைன் பகுதிகள் பிரான்சுக்கு திருப்பித் தரப்பட்ட்து.
- ஜெர்மன் படைகள் அளவில் சிறியதாக சுருக்கப்பட்டது.
- இழப்பீடு தொகை வழங்க வற்புறுத்தப்பட்டது.

2}இரண்டாம் உலகப் போரின் விளைவுகளை ஆய்வு செய்க?

- வல்லரசு தலைமையில் உலகம் இரு துருவங்களாக பிரிந்தது.
- அணு ஆயுதங்களை அதிகரிக்கும் போட்டியில் இறங்கியது.
- இராணுவத்திற்கான செலவு உச்சத்தினை எட்டின.



Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

- ஐக்கிய நாடுகள் சபை,உலக வங்கி போன்ற அமைப்புகள் உருவாக்கப்பட்டன.
- இந்தியா முதலாவதாக சுதந்திரம் பெற்றது.

**3}19ஆம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் நடைபெறுவதற்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளை விவாதிக்கவும்?**

- ஆங்கிலக் கல்வி நடுத்தரவர்க்கத்தை உருவாக்கியது.
- மேற்கத்தியக் கருத்துக்கள்,சிந்தனைகளின் தாக்கத்திற்கு உள்ளானது.
- நடுத்தரவர்கம் அரசியல்,சீர்திருத்த இயக்கங்களில் தலைமை வகித்தது.
- இந்திய மற்றும் மேலைநாட்டுப் பண்பாட்டிற்கும் இடையே இணக்கத்தை ஏற்படுத்தியது.
- கண்மூடித்தனமான மதநம்பிக்கைகள் ,சமூகத்தீமைகளை கட்டுபடுத்தியது.

**4}வேலூரில் 1806இல் வெடித்த புரட்சியின் கூறுகளை விளக்குக?**

- சிப்பாயாகப் பணியாற்றியவர்களுக்கு குறைவான ஊதியம் கொடுக்கப்பட்டது.
- சமூக மற்றும் சமய நம்பிக்கைகளுக்கு குறைவாக மதிப்பளிக்கப்பட்டது.
- சர் ஜான் கிரடாக் வெளியிட்ட புதிய இராணுவ விதிமுறைகள்.
- 1806 ஜுலை 10 அன்று புரட்சியில் இறங்கினர்.
- ஜில்லஸ்பி என்பவரால் புரட்சி அடக்கப்பட்டது.

**5}1857 ஆம் ஆண்டின் கிளர்ச்சிக்கான காரணங்கள் குறித்து விரிவாக ஆராயவும்?**

- வாரிசு இழப்புக் கொள்கை மூலம் பல பகுதி இனைக்கப்பட்டது.
- கடல் கடந்து சென்றால் தங்களது சாதியை இழக்க நேரிடும்.
- ஊதியம் மற்றும் பதவி உயர்வில் பாரபட்சம் காட்டப்பட்டது.
- புதிய என்ஃபீல்டு துப்பாக்கி வழங்கப்பட்டது.
- மங்கள் பாண்டே சிப்பாய் தனது ஐரோப்பிய அதிகாரியைத் தாக்கினார்.

**6}காந்திய இயக்கத்தின் ஒரு சிறந்த உதாரணமான சட்டமறுப்பு இயக்கம் குறித்து விரிவாக ஆராயவும்?**

- 1930 ஜனவரி 31 -ல் வைசிராய் இர்வின் பிரபுவிடம் கோரிக்கைகள் அடங்கிய மனு கொடுக்கப்பட்டது.
- அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்வது.
- நிலவருவாயை 50 % குறைப்பது.
- உப்பு வரியை ரத்து செய்வது.
- 78 தொண்டர்களுடன் தண்டி யாத்திரை மேற்க்கொண்டார்.

**7}நீதிக்கட்சியின் தோற்றத்திற்கான பின்புலத்தை விளக்கி சமூக நீதிக்கான அதன் பங்களிப்பைச் சுட்டிக் காட்டவும்?**

- 1920 நவம்பர் 20 -ல் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் தொடங்கப்பட்டது.



Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

- ஒடுக்கப்பட்ட பிரிவு குழந்தைகள் பொதுப்பள்ளியில் சேர அரசானை வழங்கப்பட்டது.
- முதல் முதலாக தேர்தலில் பெண்கள் பங்கேற்பதை அங்கீகரித்தது.
- 1926 இல் இந்து சமய அறநிலையச் சட்டம் இயற்றப்பட்டது.
- வகுப்புவாரி அரசானை இயற்றப்பட்டது.

## புவியியல்

1}தென்மேற்கு பருவக்காற்றுக் குறித்து எழுதுக?

- ”எல்நினோ” தென்மேற்கு பருவற்காற்றுக் காலத்தில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது.
- இப்பருவக் காற்று இடி மற்றும் மின்னலுடன் கூடிய துவக்கம் ”பருவமழை வெடிப்பு” என்கிறோம்.
- இக்காற்று இரண்டு கிளைகளாகப் பிரிகிறது.1}அரபிக்கடல் கிளை 2}}வங்காள விரிகுடா கிளை
- அரபிக்கடல் கிளை வட இந்தியா முழுவதும் கனமழையைக் தோற்றுவிக்கிறது.
- வங்காள விரிகுடா கிளை வடகிழக்கு இந்தியா மற்றும் மியான்மர் நோக்கி வீசுகிறது.

3}நெல் மற்றும் கோதுமை பயிரிடுவதற்கு ஏற்ற புவியியல் சூழல்கள் பற்றி விவரி?

- <u>நெல்:</u>
- <u>நெல் இந்தியாவின் பூர்விகப் பயிராகும்.</u>
- <u>இது அயனமண்டலப் பயிராகும்.</u>
- <u>வளமான வண்டல் மண் நெல் சாகுபடிக்கு ஏற்றது.</u>
- <u>கோதுமை:</u>
- <u>இது இரண்டாவது முக்கிய உணவு பயிராகும்.</u>
- <u>உத்திரபிரதேசம்,பஞ்சாப், ஹரியானா மாநிலங்களில் அதிக அளவு உற்பத்தி செய்யப்படுகிறது.</u>

4}தமிழ்நாட்டின் பீடபூமி நிலதோற்றத்தின் தன்மையை விவரிக்கவும்?

- ஏறக்குறை முக்கோண வடிவமுடையது .
- 60000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுக் கொண்டுள்ளது.
- பாரமஹால் பீடபூமி:
- தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் அமைந்துள்ளது.
- கோயம்புத்தூர் பீடபூமி:
- நீலகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் அமைந்துள்ளது.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

❖ **மதுரை பீடபூமி:**

➢ மதுரை மாவட்டத்தில் அமைந்துள்ளது.

5}காவிரி ஆறு குறித்து தொகுத்து எழுதுக?

➢ காவேரி ஆறு கர்நாடகா மாநிலத்தில் கூர்க் மாவட்ட்த்தில் தலைக்காவிரி என்ற இடதிதில் உற்பத்தியாகிறது.
➢ மேட்டூர் அணை இவ்வாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.
➢ திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இந்த ஆறு இரண்டு கிளையாக பிரிகிறது.வட கிளை கொள்ளிடம்,தென்கிளை காவிரி .
➢ கல்லனை இவ்வாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.
➢ கிளையாறுகளால் உருவாக்கப்பட்ட வலைப்பின்னல் 'தென்னிந்தியாவின் தோட்டம்" என்று அழைக்கப்படுகிறது.

6}சாலைப் பாதுகாப்பு விதிகள் பற்றி எழுதவும்?

➢ நில், கவனி, செல்.
➢ சாலை குறியீடுகள் பற்றி விழிப்புணர்வு.
➢ வாகனம் ஓட்டும் போது கைகளை நீட்டாதிர்கள்.
➢ பாதசாரிகளுக்கான இடத்தில் சாலையை கடக்குதல்.
➢ வாகனம் நெருங்கி வருகிறதா என்பதை உறுதி செய்துக்கொள்ளல்.

7}பல்நோக்குத் திட்டம் என்றால் என்ன?ஏதேனும் இரண்டு இந்திய பல்நோக்கு திட்டங்கள் பற்றி எழுதுக?

❖ **தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டம்:**

➢ தாமோதர் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.
➢ மேற்கு வங்காளம் மற்றும் ஜார்கண்ட் ஆகிய மாநிலங்கள் இதனால் பயனடைகிறது.

❖ **பக்ரா நங்கல் திட்டம்:**

➢ சட்லஜ் ஆற்றில் கட்டப்பட்டுள்ளது.
➢ உலகின் பெரிய புவியீர்ப்பு அணையாகும்.
➢ பஞ்சாப் மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்கள் பயனடைகிறது.

## குடிமையியல்

}1}இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக?

➢ உலகிலுள்ள எழுதப்பட்ட அனைத்து அரசியலமைப்பு விட மிகவும் நீளமானது.
➢ பல்வேறு நாடுகளின் அரசியலமைப்புகளிலிருந்து பெறப்பட்டது.
➢ இது நெகிழும் மற்றும் நெகிழாத்தன்மையும் கொண்டது.



Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

- கூட்டாட்சி முறை அரசாங்கத்தை ஏற்படுத்தியது.
- இந்தியா சமயசார்ப்பற்ற நாடாக்குகிறது.
- சுதந்திரமான நீதித்துறை.

2}இந்தியக் குடியரசுத் தலைவரின் சட்டமன்ற மற்றும் நீதி அதிகாரங்களை விவரி?

- நிர்வாக அதிகாரங்கள்:
- பிரதம அமைச்சரையும்,மற்ற அமைச்சர்களையும் நியமிக்கிறார்.
- அமைச்சரவை உறுப்பினர்களுக்கு துறைகளை ஒதுக்கிடு செய்கிறார்.
- மற்ற முக்கியமான பதவியான ஆளுநர் நியமிக்கிறார்.

நீதி அதிகாரங்கள்;

- தண்டனையைக் குறைக்கவும் ,ஒத்துவைக்கவும், மன்னிப்பு வழங்கவும் அதிகாரம் பெற்றுள்ளார்.

3}இந்தியப் பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை?

- அமைச்சரின் நிலையை அறிந்து துறைகளை ஒதுக்கீடு செய்கிறார்.
- கூட்டத்திற்கு தலைமை வசிக்கிறார்.
- பல்வேறு துறைகளின் பணிகளை மேற்பார்வையிடுகிறார்.
- குடியரசுத் தலைவருக்கும் அமைச்சர்களுக்கும் இடையே பாலமாகச் செயல்படுகிறார்.
- இந்திய நாட்டின் பிரதிநிதியாகப் பிரதமர் பங்கு கொள்கிறார்.

4}முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி?

- அமைச்சரவை தொடர்பானவை:
- இவரின் பரிந்துரையின்பேரில் ஆளுநர் அமைச்சர்களை நியமிக்கிறார்.
- அமைச்சர்களுக்கு துறைகளை ஒதுக்கீடு செய்கிறார்.
- அமைச்சரவையை மாற்றியமைக்கிறார்.
- அமைச்சரவைக் கூட்டத்தை தலைமை ஏற்று நடத்துகிறார்.
- ஆளுநர் தொடர்பானவை:
- மாநில அரசு வழக்குரைஞர்.
- மாநில தேர்தல் ஆணையர்.

5}ஆளுநரின் சட்டமன்ற அதிகாரங்களை விவரி?

- சட்டமன்ற அதிகாரங்கள்:
- சட்டமன்றக் கூட்டத்தைக் கூட்டவும்,ஒத்திவைக்கவும் மற்றும் கலைக்கவும் உரிமை பெற்றுள்ளார்.
- நிலுவையிலுள்ள மசோதா குறித்து,சட்டமன்றத்திற்கு செய்தி அனுப்புலாம்.
- ஆங்கிலோ - இந்தியன் வகுப்பினரிலிருந்து மாநில சட்டமன்றத்திற்கு நியமனம் செய்லாம்.



Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

- மாநில சட்ட மேலவைக்கு { கலை,இலக்கியம்,அறிவியல் }போன்ற துறைகளிலிருந்து 1- ல் 1 பங்கு இடங்களை நியமனம் செய்கிறார்.
- சட்ட சபையின் முதல் கூட்டத்தொடரில் சொற்பொழிவு ஆற்றுகிறார்.

6}அணிசேரா இயக்கம் பற்றி விரிவான குறிப்பு எழுதுக?

- அணிசேராமை என்பது இந்திய வெளியுறவுக்கொள்கையின் முக்கிய அம்சமாகும்.
- இராணுவக் கூட்டனியில் சேராமல் வெளிநாட்டு விவகாரங்களில் தேசிய சுதந்திரத்தைப் பராமரிப்பது.
- அரசியல் இயக்கத்திலிருந்து பொருளாதார இயக்கமாக மாறியது.

அணிசேரா இயக்கத்தின் நிறுவனத் தலைவர்கள்:

- ✓ ஜவஹர்லால் நேரு - இந்தியா
- ✓ டிட்டோ -யுகோஸ்லாவியா
- ✓ நாசர் -எகிப்து
- ✓ சுகர்னோ -இந்தோனேசியா
- ✓ குவாமே நிக்ரூமா -கானா

## பொருளியல்

1}GDPஐ கணக்கீடும் முறைகள் யாவை?

- வருமான முறை:
- பண்டங்கள் மற்றும் பணிகள் துறையில் ஈடுபட்டுள்ள ஆண்கள் ,பெண்கள் வருமானத்தை கணகிடப்படுகிறது.
- செலவின முறை:
- அனைத்து இறுதிப் பண்ட பணிகளுக்கு மேற்க்கொள்ளும் செலவுகளின் கூட்டுத் தொகையாகும்.
- மதிப்புக் கூட்டு முறை:
- டீதூள்+பால்+சர்க்கரை = தேநீர்

2}இந்தியாவில் GDP யில் பல்வேறு துறைகளின் பங்கினை விவரி?

- முதன்மைத் துறை:{ வேளாண் துறை}
- வேளாண்மை மற்றும் விவசாய சார்ந்த நடவடிக்கை மேற்க்கொள்கிறது.
- எ கா: மீன் பிடித்தல், காடு வளர்த்தல்.
- இரண்டாம் துறை: {தொழில் துறை}
- மூலப்பொருளை மாற்றியமைப்பதன் மூலம் பண்டங்கள் உற்பத்தி செய்கிறது.
- எ கா: இரும்பு எஃகு, ஜவுளி தொழில்


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

- மூன்றாம் துறை: { பணிகள் துறை }
- அரசு,அறிவியல் ஆராய்ச்சி, போக்குவரத்து.

3}உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக?

- உலகளாவிய சமத்துவமின்மை,
- குழந்தை தொழிலாளர் முறை மற்றும் அடிமைத்தனம்.
- மக்கள் அதிகமாக துரித உணவுகளை உட்கொள்கிறார்கள்.
- உலகளாவிய சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுத்துகிறது.
- உலகமயமாக்கல் உறுதியற்ற தன்மைக்கு வழிவகுக்கிறது.

4}பொது விநியோக முறையை விவரிக்கவும்?

- தமிழ்நாடு "உலகளாவிய பொது வழங்கல் முறை"யை ஏற்றுக் கொண்டது.
- மற்ற மாநிலங்களில் "இலக்கு பொது வழங்கல் முறை" செயல்பாட்டில் இருந்தது.
- உலகளாவிய பொது வழங்கல் முறையில் குடும்ப வழங்கல் அட்டை பெற்றிருப்பவர்கள் அனைவருக்கும் உணவு பொருட்கள் வழங்கப்படும்.
- இலக்கு பொது வழங்கல் முறையில் பயனாளிகளுக்கு சில அளவுகோல்களின் அடிப்படையில் அடையாளம் கானப்படுகிறது.
- மத்திய,மாநில அரசாங்கங்கள் பொது வழங்கல் முறைக்கு மானியம் அளிக்கின்றன.

5}கருப்பு பணம் என்றால் என்ன? அதற்கான காரணங்களை எழுதுக?

- கருப்பு பணம் என்பது கருப்பு சந்தையில் ஈட்டப்பட்ட வருமானம் ஆகும்.
- வரி நிர்வாகிகளிடம் மறைக்கப்பட்ட ,கணக்கிடப்படாத பணம் ஆகும்.
- கருப்பு பணத்திற்கான காரணங்கள்:
- ✓ பண்டங்கள் பற்றாகுறை
- ✓ உரிமம் பெறும் முறை
- ✓ தொழில் துறையின் பங்கு
- ✓ கடத்தல்
- ✓ வரியின் அமைப்பு

6}தொழில்முனைவோரின் பங்கினைப் பற்றி விளக்குக?

- நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு தொழில்முனைவோரின் பங்கு மிக முக்கியமானது.
- மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் தலா வருமானம் உயர்வதற்க்கு உதவி புரிகிறார்கள்.
- ஏற்றுமதி வியாபாரம் மூலமாக மூலதனத்தைச் செயல்பட வைக்கிறார்கள்.


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

- கைவினைஞர்கள், தொழில் வல்லுநர்களுக்கு பெரிய அளவிலான வேலைவாய்ப்பை வழங்குகிறார்கள்.
- விலைக்குறைந்த மற்றும் தரமான பொருட்களை வழங்குகின்றனர்.

## { வேறுபடுத்துக }

1}இமயமலை ஆறுகள் மற்றும் தீபகற்ப ஆறுகள்.?

| இமயமலை ஆறுகள் | தீபகற்ப ஆறுகள் |
|---|---|
| 1.வட இந்தியாவில் பாய்கிறது. | 1.தென்னிந்தியாவில் பாய்கிறது. |
| 2.நீளமானவை மற்றும் அகலமானவை | 2.குறுகலான மற்றும் நீளம் குறைந்தவை. |

2}மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகள்?

| மேற்குத் தொடர்ச்சி மலைகள் | கிழக்குத் தொடர்ச்சி மலைகள் |
|---|---|
| 1.வட பகுதி சயாத்ரி என்று அழைக்கப்படுகிறது. | 1. இம்மலை பூர்வாதிரி என்று அழைக்கப்படுகிறது. |
| 2.இம்மலைகள் தொடர்ச்சியாக காணப்படுகின்றன. | 2.இம்மலைகள் தொடர்ச்சியாக காணப்படவில்லை |

3}வானிலை மற்றும் காலநிலை?

| வானிலை | காலநிலை |
|---|---|
| 1.ஒரு குறிப்பிட்ட இடத்தில் வளிமண்டலத்தின் தன்மையைக் குறிக்கும். | 1.நீண்ட நாளைய வானிலை சராசரி ஆகும். |
| 2.இது அன்றாடம் மாறிக் கொண்டே இருக்கும். | 2.இது மாறாது. |

4}வடகிழக்குப் பருவக் காற்று மற்றும் தென் மேற்குப் பருவக்காற்று?

| வட கிழக்குப் பருவக் காற்று | தென்மேற்குப் பருவக்காற்று |
|---|---|
| 1.இது அக்டோபர் முதல் டிசம்பர் வரை வீசுகிறது. | 1.இது ஜுன் முதல் செப்டம்பர் வரை வீசுகிறது. |
| 2.நிலத்திலிருந்து வங்காள விரிகுடாவை நோக்கி வீசுகிறது. | 2.கடலில் இருந்து நிலத்தை நோக்கி வீசுகிறது. |

5} புதுப்பிக்க இயலும் மற்றும் புதுபிக்க இயலா வளங்கள்?

| புதுப்பிக்க இயலும் வளம் | புதுபிக்க இயலா வளம் |
|---|---|
| 1.பயன்பாட்டிற்கு பிறகு | 1. பயன்பாட்டிற்கு பிறகு மீண்டும் |


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

| | |
|---|---|
| இயற்கையான முறையில் மீட்டுருவாக்கும் செய்துக் கொள்ளும் வளம். | மீட்டுருவாக்கும் செய்ய இயலாத வளம். |
| 2.எ கா: சூரிய ஆற்றல்.காற்று சக்தி | 2.எ கா: நிக்கரி,பெட்ரோல் |

6}வேளாண் சார்ந்த மற்றும் கனிமம் சார்ந்த தொழிலகங்கள்?

| வேளாண் சார்ந்த தொழிலகங்கள் | கனிமம் சார்ந்த தொழிலகங்கள் |
|---|---|
| 1.வேளாண் துறையிலிருந்து மூலப் பொருளைப் பெறுகின்றன. | 1.உலோகம் மற்றும் உலோக மற்ற மூலப்பொருளை பெறுகின்றன. |
| 2.எ கா:பருத்தி நெசவாலைகள் | 2.எ.கா:இரும்பு எஃகு தொழிலகங்கள் |

7}தனிநபர் தகவல் தொடர்பு மற்றும் பொதுத் தகவல் தொடர்பு?

| தனிநபர் தகவல் தொடர்பு | பொதுத் தகவல் தொடர்பு |
|---|---|
| 1.தனி நபர்களிக்கிடையே தகவல் பரிமாற்றம். | 1.ஒரே நேரத்தில் லட்சக்கணக்கான மக்கள் தகவல்களைப் பெறுவது. |
| 2.பயனாளிகளுடன் நேரடித் தொடர்ப்பை ஏற்படுத்துகிறது. | 2.கல்வி,பொழுபொக்கு .விழிப்புண்ர்வை ஏற்படுத்துதல். |

8]உள்நாட்டு வணிகம் மற்றும் பன்னாட்டு வணிகம்?

| உள்நாட்டு வணிகம் | பன்னாட்டு வணிகம் |
|---|---|
| 1.ஒரு நாட்டின் எல்லைக்குள் நடைபெறும். | 1.இரண்டு அல்லது மேற்பட்ட நாடுகளுக்கிடையை நடைபெறும். |
| 2.நிலவழிப் போக்குவரத்து பயன்படுத்தப்படுகிறது. | 2.நீர்வழிப் போக்குவரத்து பயன்படுத்தப்படுகிறது. |

9}நீர் வழிப்போக்குவரத்து மற்றும் வான்வழிப்போக்குவரத்து?

| நீர் வழிப்போக்குவரத்து | வான்வழிப்போக்குவரத்து |
|---|---|
| 1.பழமையான மற்றும் மலிவான போக்குவரத்து | 1.நவீன மற்றும் பயணச்செலவு மிகுந்த போக்குவரத்து |
| 2.கனமான மற்றும் அதிக அளவிலான சரக்குகளை எடுத்து செல்ல மிகவும் ஏற்றது. | 2.பயணிகள்.சரக்குகள்,அஞ்சல் போன்றவை எடுத்துச்செல்ல ஏற்றது. |

10}உணவுப் பயிர்கள் மற்றும் வாணிபப் பயிர்கள்?



Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

| உணவுப் பயிர்கள் | வாணிபப் பயிர்கள் |
|---|---|
| 1.உணவு தேவைக்காக அதிக அளவு சாகுபடி செய்யப்படும் பயிர் | 1.தொழிற்சாலைக்கு மூலப்பொருளாக ஏற்றுமதி வணிகத்திற்கும் பயன்படுகிறது. |
| 2.எ கா: நெல்,தினை,பருப்பு | 2.எ கா: கரும்பு, தென்னை |

## காலக்கோடு:
## [இந்திய வரலாற்று நிகழ்வு]

**1900 முதல் 1950 வரையிலானவரலாற்றுநிகழ்வுகளைக்குறிக்கவும்?**

**1}வங்கப்பிரிவினை-1905**
**2}முஸ்லிம்லீக்தோற்றம்-1906**
**3}சூரத்பிளவு-1907**
**4}வங்காளம்மீண்டும்இனைக்கப்படுதல்-1911**
**5]தன்னாட்சிஇயக்கம்-1916**
**6}லக்னோஇயக்கம்-1916**
**7}சம்பரான்சத்தியாகிரகம்-1917**
**8}கேதாசத்தியாகிரகம்-1918**
**9}ரௌலட்சட்டம் {அல்லது} ஜாலியன்வாலாபாக்படுகொலை 1919**
**10}ஒத்துழையாமைஇயக்கம்-1920**
**11}சௌரிசௌராசம்பவம்-1922**
**12}சுயராஜ்ஜியக்கட்சியின்தோற்றம்-1923**
**13}சைமன்குழுநியமனம்-1927**
**14}மோதிலால்நேருஅறிக்கை-1928**
**15}லாகூர்காங்கிரஸ்மாநாடு-1929**
**16}உப்புசத்தியாகிரகம்-1930**
**17}முதல்வட்டமேசைமாநாடு-1930**
**18}இரண்டாம்வட்டமேசைமாநாடு-1931**
**19}மூன்றாம்வட்டமேசைமாநாடு-1932**
**20}இந்தியஅரசுசட்டம்-1935**


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

21}மாகாணங்களில்முதலாவதுகாங்கிரஸ்அமைச்சரவைஅமைக்கப்படுதல் -1937
22}தனிநபர்சத்தியாகிரகம்-1940
23}வெள்ளையனேவெளியேறுஇயக்கம்-1942
24}சிம்லாமாநாடு -1945
25}அமைச்சரவைதூதுக்குழுவருகை-1946
26}இந்தியாவிடுதலைபெறுதல்-1947

## காலகோடு -2

## [உலக வரலாற்று நிகழ்வு]

1}தென்னாப்பிரிக்கஒன்றியம்உதயமாதல்-1910
2}முதல்பால்கன்போர் -1912
3}முதல்உலகப்போர்தொடக்கம் -1914
4}ரஷ்யப்புரட்சி -1917
5}முதல்உலகப்போர்முடிவு -1918
6}பாரிஸ்அமைதிமாநாடு -1919
7}பன்னாட்டுசங்கம்தோற்றம் -1920
8}முசோலினியின்ரோமாபுரிஅணிவகுப்பு-1922
9}வியட்நாம்தேசியக்கட்சிஉதயம்-1927
10}பொருளாதாரப்பெருமந்தம்-1929
11}ஹிட்லர்ஜெர்மணியின்சான்சிலர்ஆதல்-1933
12}நீண்டபயணம் -1934
13}முசோலினிஎத்தியோப்பியாவின்மீதுபடையெடுத்தது-1935
14}மியூனிச்உடன்படிக்கை-1938
15}இரண்டாம்உலகப்போர்தொடக்கம்-1939
16}பிரிட்டன்போர்-1940
17}முத்துதுறைமுகநிகழ்வு -1941
18}ஸ்டாலின்கிரேடுபோர் -1942
19}இரண்டாம்உலகப்போர்முடிவு -1945


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

# பத்தாம் வகுப்பு

# சமூக அறிவியல்

# மெல்லக் கற்போரின் வெற்றிக் கையேடு

**தயாரிப்பு:**
**இரா.ராஜா,**
**பட்டதாரி ஆசிரியர் { சமூக அறிவியல் }**
**அரசு உயர் நிலைப் பள்ளி,**
**நடுவலூர்.**


Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com